ஸ்ரீயைநம:

# திருவெவ்வுளூர் மாஹாத்மியம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 MAR 1914
MADRAS.

இஃது

ஸ்ரீ. உ. வே. கொந்தமூர் கிடாம்பி
நர்ராயண தேசிகாசாரியரால்

மார்க்கண்டேய புராணத்திலிருந்து
சுருக்கமாய் எழுதப்பட்டு
திருவெவ்வுளூர்
ஸ்ரீ வீரராகவஸ்வாமி தேவஸ்தானம்
ஏஜண்டு
ஸ்ரீ உ. வே. வங்கிபுரம்
காளி வீரராகவ அய்யங்காரால்
பிரசுரம்செய்யப்பட்டது.

---

சென்னை:
வச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.
1914

ஒன்று.

876
Q22:38.2112TV
N14
121626

ஸ்ரீயைநம:

# திருவெவ்வுளூர் மாஹாத்மியம்.

இஃது

ஸ்ரீ. உ. வே. கொந்தமூர் கிடாம்பி

நாராயண தேசிகாசாரியரால்

மார்க்கண்டேய புராணத்திலிருந்து

சுருக்கமாய் எழுதப்பட்டு

திருவெவ்வுளூர்

ஸ்ரீவீரராகவஸ்வாமி தேவஸ்தானம்

ஏஜண்டு

ஸ்ரீ உ. வே. வங்கிபுரம்

காளி வீரராகவ அய்யங்காரால்

பிரசுரம்செய்யப்பட்டது.

சென்னை:

ஆநந்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1914

விலை அணா] [ஒன்று.

# விளம்பரம்.

இப்புஸ்தகம் வேண்டியவர்கள் திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவஸ்வாமி தேவஸ்தானம் ஏஜண்டு வங்கிபுரம், காளி வீரராகவ அய்யங்கார் அவர்களிடத்திலும், திருவள்ளூர் டி. மு. கோர்டு ஷ்டாம்புவெண்டர் கி. வீரராகவாசாரியர் அவர்களிடத்திலும் விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.



# திருநாமங்கள்.

| | | |
|---|---|---|
| (1) | பெருமாள். | ஸ்ரீவீரராகவன்.<br>எவ்வுள்கிடந்தான். |
| (2) | தாயார். | கநகவல்லீ. |
| (3) | க்ஷேத்திரம். | புண்ணியாவர்த்தம். |
| | வநம். | வீக்ஷாரண்ணியம். |
| | திருக்கோயில். | எவ்வுள் (கிம்கிரகம்.) |
| (4) | விமாநம். | விஜயகோடி விமானம். |
| (5) | புஷ்கரணி. | ஹிருத்தாபநாசநீ. |

## மங்களாசாஸநம்.

1. திருமங்கையாழ்வார்.
2. திருமழிசைப்பிரான்.

OFFICE OF THE REGISTRAR ...
6 - MAR 1914
MADRAS.



ஸ்ரீயை நம:

ஸ்ரீ கநகவல்லீ ஸமேத ஸ்ரீ வீரராகவ பரபிரம்மணே நம:

# திருவெவ்வுளூர் மாஹாத்மியம்.

ஸ்ரீயஃபதியான ஸர்வேச்வரன் ஸ்ரீவைகுண்ட திவ்ய நகரத்தை விட்டு பூலோகத்தில் ஸர்வசேதநர்களையும் உஜ்ஜீவிப்பிக்க கருணையால் ஸ்வயம்வ்யக்தம், திவ்யம், ஸைத்தம் மாநுஷம் என்னும் நான்குவிதமான 108 (நூற்றெட்டு) திவ்ய தேசங்களில் பிரம்மாண்ட புராணத்தில் சொல்லிய ஸைத்தமாகிய இந்த புண்யா வர்த்தம் (வீக்ஷாரண்யம்) என்கிற திருவெவ்வுளூரில் ஹிருத்தாபநாசநதீரத்தில் தவம் செய்து திருவஷ்டாக்ஷரஸித்தியடைந்திருக்கிற ஸ்ரீசாலிஹோத்திரமுனிவருக்கு பிரத்தியக்ஷமாகி ஸ்ரீவீரராகவன் என்னும் திருநாமத்துடன் விஜயகோடி விமாநத்தில் சேஷசயநத்தில் திவ்யமங்கள விக்கிரக ரூபனாய் பக்தர்கள் விரும்பும் வரங்களை அளிப்பதே விருதமாகக்கொண்டு சாலிஹோத்திரமுனிவரின் சிரஸில் வலதுகையை வைத்துக்கொண்டும், நாபீகமலத்தில் தோற்றின நான்முகனுக்கு இடதுகையால் க்ஞானோபதேசம் பண்ணிக்கொண்டும், தெற்கே சிரஸை வைத்துக்கொண்டும் சயநித்து ஸேவை ஸாதிக்கிறார்.

இவரது வைபவத்தையும் க்ஷேத்திர மாஹாத்மியத்தையும் தீர்த்தமஹிமையும் மார்க்கண்டேய புராணத்தில் பரக்கக் காணலாம்.

மிதக்ஞானிகளும் பாலர்களும் ஸ்த்ரீகளும் ஸுலபமாயறியும்படியான தமிழ்ச் சொற்களால் வெகு சுருக்கமாய் எழுதப்பட்டது.

## திருவெவ்வுளூர் மாஹாத்மியம்

சதாநீக மஹாராஜ குமாரனான ஸஹஸ்ராநீக மஹாராஜன் மார்க்கண்டேய முனிவரை நோக்கி ஓய்! முனிசிரேஷ்டரே! யோகஸித்தி அடையத்தக்க வநமும், புண்ணிய தீர்த்தமும் திருக்கோயிலும், எந்த க்ஷேத்திரத்திலிருக்கிறது. கிருபையாக அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டுமென்று வணக்கமாய் தண்டம் ஸமர்ப்பித்து பிரார்த்தித்தான்.

மார்க்கண்டேயர் களிகூர்ந்து ஓய் ஸஹஸ்ராநீக மஹாராஜனே! கிருதயுகத்தில் தேவபாக முனிவருக்கும் சாலிஹோத்திர மஹரிஷிக்கும், இது விஷயமாக நடந்த ஸம்வாதத்தை பின்வருமாறு சொல்லுகிறேன் கேளும்.

கங்காதீரத்தில் பதரிகாசிரமத்தில் தேவபாகர் என்னும் ஓர் முனிசிரேஷ்டர் இருந்தார். அவர் தவம் செய்து சித்தி அடையத்தக்க பரிசுத்தமான தபோவநமும், ஸர்வவித பாபங்களை ஒழிக்கக்கூடிய புண்ணிய தீர்த்தமும், பக்தியுடன் உபாஸிப்பவர்களுக்கு இஹத்தில் பசுபுத்திர தநதான்யாதி யோகங்களையும்,பரத்தில்மோக்ஷத்தையும் கொடுக்கிற எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற திருக்கோயிலுமுள்ள புண்ணியக்ஷேத்திரத்தை அருளிச்செய்யவேணுமென்று சாலிஹோத்திர முனிவரை பிரார்த்தித்தார்.

சாலிஹோத்திரர், தேவபாகரைப் பார்த்து ஓய் மஹரிஷியெ! நீர்கேட்டது மிகவும் துர்லபமானது ஆகிலும் சொல்லுகிறேன் கேளும். அகஸ்த்திய ரிஷியிணுச்ரிமத்தில் உண்டாகி விந்திய பர்வதத்தினருகில் வெள்ளி மலை வழியாய் வருகிற விருத்தக்ஷீரநதிக்கு வடக்கு கல்லாற்றுக்குக் கிழக்கு குசஸ்தலீ நதிக்குத் தெர்க்கு ஸமுத்ரத்திற்கு மேர்க்கு இது நடுவில் கிழக்கு மேர்க்கு ஐந்துயோஜனை நீளம் தெர்க்கு வடக்கு ஒருயோஜனை அகலமுமுள்ள புண்ணியாவர்த்த க்ஷேத்திரத்தில் வீக்ஷாரண்ணிய மென்கிற தபோவநமும் அதில் ஹிருத்தாப நாசநமென்கிற தேவகாதமான ஓர் புண்ணிய ஸரசும், அதின் வடகரையில் விஜயகோடி விமாநத்தில் பாம்பணைமேல் பள்ளி கொண்டிருக்கிற ஸ்ரீமந்நாராயணனையுடைய திருக்கோயிலும் இருக்கிறது. நீர் அவ்விடம் போய் தவம் செய்து முக்தியடையலாம், என்றார்.

## வீக்ஷாரண்ய மஹிமை.

இந்த புண்ணியா வர்த்தத்தில், மா, புன்னை, சுரப்புன்னை, சம்பகம், அசோகம், மொகுழன், தென்னை, வாழை முதலான உயர்ந்த மரங்களால் அடர்ந்தும், நெல், முதலிய ஒஷதிகளால் பிரகாசித்துக் கொண்டும், மல்லிகை, முல்லை, நீலாம்பரம், மரு, தவனம், தாழை முதலான புஷ்பங்களால் பரிமளித்துக் கொண்டும், யாகாதிகள் செய்ய தர்பம், ஸமித்து முதலான வைதிக வஸ்துக்களால் நிரைந்தும் யானை, ஸிம்மம், மான், புலி, கரடி முதலிய மிருகங்கள் ஸஞ்சரித்துக் கொண்டும், அன்னம், குயில், மயில், குருவி, முதலிய பறவைகளுடன்

கிளிகள் கொஞ்சிக் கொண்டும், இருக்கிற வீக்ஷாரண்ணியம் என்று ஓர் வநமிருக்கிறது. அதில் அனேக குகைகளும், பர்ணசாலைகளும், யக்ஞவாடிகளும், நகரங்களும் இருக்கின்றன. அதுகளில் அத்திரி, வஸிஷ்டர், வியாஸர், சாலி ஹோத்திரர் முதலான மஹர்ஷிகளும் ஷட்கர்ம நியதர்களான பிராம்மணோத்தமர்களும், ஸத்திய பராக்ரமங்களால் கீர்த்தி பெற்ற க்ஷத்திரியர்களும், குபேரனுக்கொப்பான தநமுள்ள வைசியர்களும், பிராம்மணர்களின் பாதங்களை நாடிக் கொண்டிருக்கிற சூத்திரர்களும், வஸிக்கிறார்கள். இவர்கள் செய்யும் யாகாதிகளையும் ஸத்கர்மங்களையும் கெடுத்து இவர்களையும் ஹிம்ஸிக்க வேணுமென்று இராக்ஷஸர்கள் மாயாவியாய் இவ்வநம் புகுந்து செய்யும் அக்கிறமங்களைப் பார்த்து பக்தரக்ஷகனை பகவான் ஸஹிக்காமல் இவர்களை ஸம்ஹரித்தார். மூவ்வுலகங்களையும் நடுநடுங்கச் செய்தவர்களான மதுகைடபர்களுக்கும் மஹாவிஷ்ணுவுக்கும் மஹாபயங்கரமான யுத்தம் நடந்தது. அப்போது தேவர், அசுரர், ராக்ஷஸர், மனிதர் முதலானவர்கள் பயந்து ஓடி விவேகமற்று மயங்கி நிலைதவறினார்கள். அந்த மதுகைடபர்கள் ஸத்திய லோகம் வரையில் உயர்ந்திருந்தமையால் அவர்களிடம் பயந்து சூர்யசந்திரன் ஸஞ்சரிக்க வில்லை. நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கவில்லை. வாயு வீசவில்லை. அக்கினி கொழுந்துவிட்டு எரியவில்லை. பிராம்மணர்களும் ரிஷிகளும் வேதாத்தியயனத்தையும் யாகாதி ஸத்கர்ம்மங்களையும் செய்யவில்லை. இம்மாதிரி கஷ்டங்களை அநுபவிக்கையில் தீநதயாளுவான லக்ஷ்மீநாதன் மூவ்வுலகங்களையும் எரிக்கக்கூடியதாயும் ஆயுதங்களுக்கெல்லாம் ராஜாவுமான தம்

சக்கிராயுதத்தை இந்த ராக்ஷஸர்கள்மீது ஏவினர். துறத்திக்கொண்டோடி வருகிற அந்த சக்கிராயுதத்தைப் பார்த்து பயந்து ஓடி அகப்படாமல் மறைய மூவுலகங்களிலும் சுத்திப் பார்த்து இடமகப்படாமையால் விரைந்தோடி வந்து இந்த வீக்ஷாரண்ணியத்தில் புகுந்து மறைந்தார்கள். ஸர்வஞ்யனுன பகவான் இவர்களைத் தேடிவந்து விஜயகோடி விமாநத்திலிருந்து சக்கிராயுதத்தால் ஸம்ஹரித்தார்.

பிறகு ஆபத்துக்களெல்லாம் நீங்கி சூர்யாதி தேவதைகளும் பிராம்மணர்களும் மஹரிஷிகளும், முன்போல் தங்கள் தங்கள் காரியங்களைச் செய்தார்கள். இஷ்ட ஸித்தியையுமடைந்தார்கள். இக்ஷேத்திரத்தில் யாராகிலும், தெரிந்தாவது தெரியாமலாவது புண்ணியத்தைச் செய்தாலும் பாபத்தைச் செய்தாலும் ஜநித்தாலும் மறித்தாலும், பெரும் துயரத்தைத்தருகிற யமலோகத்தை அடையாமல் மோக்ஷத்தையே அடைகிறார்கள். இவ்விடத்தில் ஒருதரம் செய்த புண்ணியம் பலவிதமாகப் பலிப்பதால் புண்ணியாவர்த்தமென்றும், பகவான் மனிதர்களால் இவ்விடத்தில் பார்க்கப்படுகிறபடியால் வீக்ஷாரண்ணியமென்றும் விளங்குகிறது. இவ்விடத்தில் எப்பொழுதும், எம்பெருமான் விஜயகோடி விமாநத்தில் சேஷசயநத்தில் இவ்விடாய் நீரசயநித்துக் கொண்டிருக்கிறார்.

பின்னும் ஸஹஸ்ராநீக மஹாராஜன் மார்க்கண்டேய முனிவரை நோக்கி ஓய் முனிசிரேஷ்டரே! இதுவரையில் எனக்கு தேவரீர்கள் அருளிச் செய்த க்ஷேத்திர மஹிமையைகேட்டு ஸந்துஷ்டனுனேன். இனி தீர்த்தமஹிமை

யை கேட்க விரும்புகிறேன். கிருபையாக ஸாதித்தருள வேணும் என்றான்.

## ஹிருத்தாபநாசந தீர்த்த மஹிமை.

அன்னம், நீர்க்காக்கை முதலிய ஜலசரபக்ஷிகளால் நிறைந்தும் தாமரை, செங்கழிநீர், கருநெய்தல், (அல்லி), ஆம்பல் முதலான புஷ்பங்களுடன் அலைகள் மோதிக்கொண்டுமிருக்கிற இந்த ஹிருத்தாபநாசந தீர்த்தத்தை தொட அதிகாரமில்லாத சண்டாளாதி ஜாதியர்கள் பார்த்தாலும், ஸ்நாநம் செய்ய சக்தியற்ற ரோகிஷ்டர்கள் பிரோக்ஷித்துக்கொண்டாலும், ஸ்நாநம் செய்யத் தக்கவர்கள் ஸ்நானம் செய்தாலும், அவர்கள் ஹிருதயத்தில் இருக்கும் பாபங்களும் போய்விடும். பாபமென்றறிந்தாவது அறியாமலாவது, ரஹஸ்யத்திலாவது பலரறியவாவது அதிகமாகவாவது கொஞ்சமாகவாவது செய்த பாபங்களும் முன் ஜந்மத்தில் செய்த பாபங்களின் பயனாக இஜ்ஜந்மத்தில் அனுபவிக்கும் பலவித வியாதிகளும், போய்விடும். ஒருவருஷகாலம் இடைவிடாமல் தினந்தோறும் இதில் பக்தியுடன் ஸ்நாநம் செய்தால் விரும்பின ஸகல பலன்களையும் பெற்று வாழ்ந்து பறத்தில் மோக்ஷத்தையும்அடைவார்கள். தை அமாவாஸையில் பிரம்மாதி தேவர்களும்,நாரதாதி முனிவர்களும்,மற்றும் ஸகலமான ஜநங்களும் ஸ்நாநம்செய்து அதிகபலனை அடைகிறார்கள்.

### உதாஹரணம்

I. கிருதயுகத்தில் கௌசிகன் என்னும் ஓர் பிராம்மணர் அருந்தவத்தால் ஸர்வ சாஸ்திரங்களையும் தர்மங்

களையும் அறிந்து தாய்தந்தைகளுக்கும் ஆசார்யனுக்கும் சிச்ரூஷைசெய்து வந்தார். அவருக்கு தீர்த்தயாத்திரை செய்யவேணுமென்று தோற்றிற்று. முதலில் கங்காயாத்திரையாக வடக்கே போகும்போது வழியில் தண்டகாரணத்தில் சூர்யாஸ்தமனமாச்சுது. பேரிருளில் புலிமுதலிய காட்டுமிருகங்களுக்கு பயந்தும் பசிதாகங்களால் வருந்தியுமிருக்கிற அந்த பிராம்மணர் ஒரு புதரில் புகுந்து மறைந்தார். பூர்வ ஜந்மத்தில் செய்த பாபவிசேஷத்தால் ஒரு சண்டாளனைப்பார்த்தார். சண்டாளன் அவருடைய தீநஸ்வரத்தைக்கேட்டு அவரிருப்பிடம்போய்பார்த்து அவரை விசாரிக்கும்போது பதில் சொல்லக்கூட சக்தியற்றவராயிருப்பதைப் பார்த்து தன் தோளின்மேல் ஏற்றிக்கொண்டு தன் வீட்டில் கொண்டுவிட்டு பசிதாகம் தீரும்படியான பலவித உணவுகளால் பக்தியுடன் ஆராதித்தான். அந்த பிராம்மணர் பசிதாகத்தால் மதிமயங்கி சண்டாளனது உணவு என்றறியாமல் புஜித்து சயநித்தார் சண்டாளன் பதினாறு வயதுள்ள தன் ரூபவதியான பெண்ணை நன்றாக அலங்கரித்து அந்த பிராம்மணன் கால்களை நடந்துவந்த சிரமம் தீருமபடி பிடிக்கச் செய்தான். சிரமம் தீர்ந்ததும் அந்த பிராம்மணன் ரூபவதியாயும் ஸர்வாபரண பூஷிதையாயுமிருக்கிற அந்தப் பெண்ணை இச்சித்தார். அவள் லஜ்ஜையால் பதில் சொல்லாமலிருக்கும்போதே அவளை பலாத்காரமாக பிடித்திழுத்து காமபூர்த்தியை செய்துக்கொண்டார். பிறகு அவளுடன் கூட பூமண்டலம் முழுமையும் சுத்தி வருகையில் தெய்வச்செயலாய் இந்த வீக்ஷாரண்ணியத்தையடைந்தார். தை அமாவாஸ்யையில் இந்த ஹிருத்தாப நாசன தீர்த்தத்தில்

ஸ்நானம் செய்தார். தீர்த்த மஹிமையால் அஸஹ்யமான பாபம் போய் நர்கதியை அடைந்தார்.

2. தக்ஷபிரஜாபதிக்கு ஸதீ என்று ஒரு பெண்ணிருந்தாள். அவளை ருத்திரன் விவாஹம் செய்துக்கொண்டு ஹிமாலயத்தின பக்கலில் தவம் செய்துக் கொண்டிருந்தார். தக்ஷர் தான் செய்யும் யாகத்துக்கு இவளையும் ருத்திரனையும் தவிர மற்ற எல்லா பெண்களையும் மருமக்களையும் வரவழித்தார். ஸதீயானவள் தன்னை அழைக்காமலிருக்கும்போதே நானே பர்த்தாவால் தடுக்கப்பட்டும் ஸகல பரிஜனங்களோடும் கூட பிதாவின் யாகசாலைக்குப் போனாள். அங்கே தன்னை தகப்பனார் பார்த்தும் விசாரிக்காமலிருந்த கோபத்தினால் முகம்கருத்து உதடுகள் துடித்துக் கொண்டு தகப்பனாரைப்பார்த்து ஓய் பிதாவே! நீர் என்னையும் மஹாவல்லமை சாலியான என் பர்த்தாவையும் தவிர மற்ற பெண்களையும் அவர்கள் பர்த்தாக்களையும் அழைத்து எங்களை அவமானம் செய்யும்படியான என்ன காரியம் செய்தோம். நீர் செய்யும் யாகம் நிறைவேறுமா, என்று சொல்லிக்கொண்டு தன் சரீரத்தை யோகமஹிமையால் பிதாவின் முன்னிலே விட்டுவிட்டாள். கூடவந்தவர்கள் இந்த விருத்தாந்தத்தை ருத்திரபகவானுக்குப் போய்ச் சொன்னார்கள். அந்த பரமசிவன் இதைக் கேட்டு கண்கள் சிவந்து பிரளயகாலம்போல கோபம் கொண்டு தனது நெத்தியிலுண்டான வேர்வையில் மஹா பராக்கிரம சாலியான வீரபத்திரனை சிருஷ்டித்து தனக்குக் கெடுதி செய்த தக்ஷரைக் கொன்றுவிடும்படி ஆக்ஞாபித்தார். மஹா பராக்கிரமசாலியான

அந்த வீரபத்திரன் தக்ஷருடையயாகசாலையில் நுழைந்து அவ்விடமிருந்த ரித்விக், முதலிய மஹாரிஷிகளையும் பிராம்மணர்களையும் பயமுறுத்தி தெரித்துவிட்டு தேவர்களின் சரீரத்தை துண்டுதுண்டுகளாகவெட்டி எரிந்துவிட்டு பிரகுமஹரிஷியின் மீசையை பிடிங்கி ஹிம்ஸித்து தக்ஷபிரஜர்பதியின் சிரசை கத்தியால் அரத்து குத்தி கிளரியாகாக்நியில் எறிந்தான். இத்தால் ராக்ஷஸர்களும் திருப்தியடைந்தார்கள். நியமனத்தை நிறைவேற்றின வீரபத்திரன் சிவனுடைய திருவடிகளை வந்தடைந்தான். பிரம்மவித்தான தக்ஷரைக் கொன்றதினால் உண்டான பிரம்மஹத்தி ருத்திரனுடைய நியமனத்தால் கொன்றதாகையால் ருத்திரனெதிரில் வந்து நின்றது.

அதை விலக்க ருத்திரன் எல்லா புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தும் அதை ஒழிக்க ஸாத்தியப்படவில்லை. அது பின்துடர்ந்து வந்துக்கொண்டே யிருந்தது. அதனால் வருத்தப்பட்டு பரிதபித்துக் கொண்டிருக்கும்போது ஆகாசவாணி சிவனைப்பார்த்து ஓ் பகவானே! புண்ணியாவர்த்த க்ஷேத்திரத்தில் வீக்ஷாரண்ணியத்தில் ஹிருத்தாபநாசநமென்று ஒரு புண்ணிய ஸரஸ்ஸிருக்கிறது. அதில் நீர் நீராடினால் இந்த பிரம்மஹத்தி நீங்கிவிடும் என்று சொல்லிற்று. அதைக்கேட்டு மஹாதேவன் விரைவாக ஓடிவந்து ஆகாயவாணி சொன்ன சொல்படி இந்த புண்ணிய தீர்த்தத்தில் நீராடினார். அந்த பிரம்மஹத்தி உடனே அவரை விட்டு நீங்கிவிட்டது. உருத்திரன் ஹிருத்தாபநாசந புஷ்கரணியின் கரையில் ஸ்ரீவீரராகவனை தர்சித்துக்கொண்டு வாயவ்விய மூலையில் இப்பவும் வீற்றிருக்கிறார்.

3. ஓய் சாலிஹோத்திரமுனிவரே விஷ்ணுபாதத்திலுண்டான கங்கை ஸர்வபாபங்களையும் போக்கடிக்கத் தக்கதாய் ருத்திரனுடைய ஸ்வாதீநத்திலிருக்கையில் அதில் நீராடி பிரம்மஹத்தியை போக்கடிக்க முடியாமல் ஹிருத்தாபநாசந தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து போக்கடித்ததற்கு என்ன மஹிமை, அதை சொல்லவேணுமென்று மறுபடியும் தேவபாகர் கேட்டார். ஓய் தேவபாகரே! இதற்காக நாரத மஹரிஷிக்கும் அவர் பிதாவான சதுர்முகனுக்கும் நடந்த விருத்தாந்தத்தை சொல்லுகிறேன் கேளும். தை அமாவாஸ்யையில் ஹிருத்தாபநாசநதீர்த்தத்தில் நீராட வந்திருந்த வஸிஷ்டர், பார்க்கவர், வியாஸர், அத்திரி, வால்மீகர், புலஸ்தியர், புலஹர் குரது, அங்கிரஸ், அரிஷ்டநேமி, ஜமதக்நி, விச்வாமித்திரர், சாலிஹோத்திரர் முதலான மஹரிஷிகளை நாரதர் பார்த்து ஓய் தபோதனர்களே! நீங்கள் புண்ணியதீர்த்தமாகிய கங்கையைவிட்டு இவ்விடம் வந்து இந்த தீர்த்தத்தில் நீராட வேண்டியது என்னவென்று கேட்டார். அதற்கு அந்த ரிஷிகள் யோசித்து பார்த்து ஓய் நாரதபகவானே! பிரம்மதேவனை கேட்டால்தான் தெரியுமென்றார்கள்.

த்ரிலோகஸஞ்சாரியும், த்ரிகாலக் ஞானஸம்பன்னருமான அந்த நாரதர் பிரம்மலோகம்போய், தன் பிதாவாகிய சதுர்முகனை சாஷ்டாங்கமாக தண்டம் ஸமர்ப்பித்து கைகளைக் கூப்பிக்கொண்டு பயபக்தியுடன் ஹிருத்தாபநாசந ஸரஸின் மஹிமையைச் சொல்லவேணுமென்று பிரார்த்தித்தார். அதற்கு பிரம்மதேவன், கிருதயுகத்தில் ஸ்வாயம்புவமனுவம்சத்தில் ஜநித்த மஹா புண்ணியசாலி

யான பிரத்யும்ந மஹாராஜன் புத்திரனை பிரவேணு மென்று வீக்ஷாரண்ணியத்தில் ஹிருத்தாபநாசந தீரத்தில் இடதுகால் கட்டவிரலை மாத்திரம் பூமியில் ஊன்றிக்கொண்டு நூறு வருஷம் கண்களை மூடிக்கொண்டு தவம் செய்தார். பக்த பராதீநனான ஸ்ரீமந்நாராயணன் ஸர்வாபரணங்களையும் ஸர்வாயுதங்களையும் தரித்துக்கொண்டு கருடாரூடராய் ஸேவைஸாதித்தார். கண்களை மூடிக்கொண்டிருந்தமையால் ஆகாசவாணியாலறிந்து கண்களைத் திறந்து பார்த்து கண்ணாரக் கண்டு ஸேவித்து ஆநந்தமடைந்து துதித்தார். அவருடைய அருந்தவத்தால் பகவான் பிரஸன்னராய் அவர் கேழ்கும் வரங்களை அளிப்பதாக அனுக்கிரகித்தார். அவர் இந்த தீர்த்த ஸ்நான மஹிமையால் தனக்கு புத்திரர்கள் ஜநிக்க வேணுமென்றும் தை அமாவாஸ்யையில் பகவான் இங்கே ஸாந்நித்யத்தை செய்தமையால் இந்த தீர்த்தத்துக்கு மற்ற எல்லா தீர்த்தங்களைப் பார்க்கிலும் அதிக மஹிமை உண்டாகவேணுமென்றும் பிரார்த்தித்தார்.

அரசன் கோரியபடி இரண்டு வரங்களையும் கொடுத்தார். பகவானே மஹிமையை உண்டுபண்ணினபடியால் அதுமுதல் இந்த தீர்த்தம் கங்காதி தீர்த்தங்களைவிட அதிக மஹிமையுள்ளதென்று மூவ்வுலகங்களிலும் புகழப்படுகிறது என்று சொன்னார்.

---

* ஸ்ரீ மஹா பாரதத்திலும் ஆரண்ணிய பர்வத்தில் 99-வது அத்தியாயத்தில் இந்த தீர்த்த மஹிமையைச் சொல்லியிருக்கிறது.

## வஸுமதீ விவாஹம்.

வீக்ஷாரண்ணியத்தில் தர்மஸேநபுரமென்று ஒரு பெரிய பட்டண மிருந்தது. அதை திலீபமஹாராஜ வம்சத்திலுண்டான தர்மஸேந மஹாராஜன் விஷ்ணுதேவன் போல் ஆண்டான். அவனுக்கு கௌதமீ தேவீ என்னும் தர்மபத்நீ யிருந்தாள். இவர்களுக்கு வசுமதீ என்னும் பெண் ஸர்வோத்தம லக்ஷணமாய் பிறந்தாள். மஹாலக்ஷ்மியைப்போலிருக்கிற இந்தப் பெண்ணை தகப்பன் பார்த்து களிகூர்ந்து இவளுக்குத் தக்க புருஷன் எங்கே கிடைக்கப்போகிறான் என்று யோசித்துக்கொண்டேயிருந்தான். ஒருநாள் இவள் வீக்ஷாரண்ணியத்தில் ஹிருத்தாபநாசந தீரத்தில் புஷ்பம் கொய்ய ஸகிகளுடன் போனாள். அங்கே ஸ்ரீவீரராகவன் மந்மதனைப்போலப்பிரகாசிக்கிற ஒரு யௌவந இராஜகுமாரனாக காணப்பட்டார். அவள் அவரை கண்களை கொட்டாமல் பார்த்துக்கொண்டு சித்திரத்தில் எழுதின பிரதிமைபோல் அசையாமல் மோஹித்து நின்றாள். இவரும் தாமரையிதழ்கள் போன்ற கண்களும், மந்மதன் வில்போன்ற புருவங்களும், மின்னல் கொடிபோன்ற தேககாந்தியும், கருவண்டு கூட்டம்போன்ற கூந்தலும், குயில்போன்ற குரலும், சந்திரபிம்பம்போன்ற முகமும், கிளிக்கொப்பான வார்த்தையும், பூமிக்கொப்பான பொறுமையும், நிலவுபோன்ற பொன்சிரிப்பும், மல்லிகை மொக்குபோன்ற தந்தங்களும், கோவைப்பழம்போன்ற உதடுகளும், கும்பங்கள் போன்ற குசங்களும், அன்னம்போன்ற நடையும் உள்ள இந்த ஸர்வாபரண பூஷிதையான பெண்ணைப்பார்

த்து மநமகிழ்ந்து திருவெவ்வுளூரில் நாம் அவதரித்த தை அறிந்து திருமணம் செய்துக்கொள்ள லக்ஷ்மீதேவி யே இங்கு அவதரித்திருக்கிருள் என்று எண்ணி இவளி டம் வந்து பெண்ணே நீயார், உன் வரலாறென்னவெ ன்று கேட்டார். இவளும் அந்த இராஜகுமாரனைப் பார் த்து நான் தர்மஸேநமஹாராஜாவின் பெண். இதுவரை யில் எனக்கு நல்ல வரன் அகப்படாததால் கல்யாணமாக வில்லை. என்னை விவாஹம் செய்துக்கொள்ள உமக்கு விருப் பமிருந்தால் நல்ல வரனைத்தேடுகிற என் தகப்பனை பார் த்து நீர் கேட்டால் உமக்குக் கொடுப்பார். இந்த வீக்ஷா ரண்ணியத்தில் ஹிருத்தாபநாசந தீரத்தில் திருக்கோ யிலில் விஜயகோடி விமானத்தில் சேஷசயநத்தில் சயநித் திருக்கிற ஸ்ரீவீரராகவனை பக்தஜநங்கள் இடைவிடாமல் சூழ்ந்திருப்பதால் பிரம்மாதி தேவர்களும் ரிஷிகளும், மனுஷியர்களும், வந்து காத்திருந்து ஸமயம்பார்த்து ஸே வித்து இஷ்டஸித்தியை அடைகிறதுபோல நீரும் அவ ரை உபாஸித்தால் தடையில்லாமல் கூடிவரும் என்று சொன்னுள்.

ஓய் பெண்ணே, என்னை விவாஹம் செய்துக்கொ ள்ள உனக்கு இச்சையிருந்தால் உங்களுக்கு குலதெய்வ மான இந்த வீரராகவனுல் தடையிராது என்ருர். பெண் இதைக்கேட்டு தன் இஷ்டம் பூர்த்தியாகுமென்று நினை த்துக்கொண்டு தன் பிதாவுடன் போய்ச் சொன்னுள். தர்மஸேநமஹாராஜன் மந்திரிகளுடன் பிராம்மணர்களை முன்னிட்டுக்கொண்டு வந்து அந்த இராஜகுமாரனைப் பா ர்த்து தன் கன்னிகையை தானம் செய்ய முயர்ந்து ஓய் ராஜகுமாரனே உம்மிட ஊர் என்ன? பெயர் என்ன?

தாய் தகப்பன் யார்? குலகோத்திரங்கள் என்ன இவ்விடம் வந்த காரணம் யாது. இதுகளை தயவுசெய்து சொல்லுமென்றான். அதைக்கேட்டு இராஜகுமாரன் ஓய் அரசனே என் ஊர், பெயர், தாய் தகப்பன் குலகோத்திரம் முதலானதுகள் சொல்லமுடியாது; உம்முடைய கன்னிகையை எனக்கு கொடுப்பீராகில் நான் அவளோடு இங்கேயே குறைவற்ற செல்வத்துடன் வஸிக்கிறேன். அதன் பிறகு எங்கும் போகிறதில்லை என்று சொல்லி சேஷசாயியான ஸ்ரீவீரராகவன் முன்னிலையில் ஸத்தியம் செய்தார். தர்மஸேநமஹாராஜன் மிகுந்த ஆனந்தத்துடன் கல்லியாணப் பந்தல் போட்டு தநதான்யாதி கஜாந்தைச் வர்யமான வரிசைகளுடன் கன்னிகாதானம் செய்தான். இராஜகுமாரனான மணவாளன் அவள் கையை தன் கையால் பிடித்துக்கொண்டு ஸகலமானவர்களும் பார்த்துக்கொண்டிருக்கும்போது அந்த பெண்ணோடுகூட சேஷசயநத்தில் ஏறினார்.

அப்போது அந்த மணவாளனை ஸ்ரீவீரராகவனாகவும் வசுமதியை மஹாலக்ஷ்மியாகவும் தர்மஸேன ராஜன் முதலானவர்கள் நினைத்து ஸேவித்து பேரானந்தமடைந்தார்கள். அவ்வரசனும் எம்பெருமானுடைய அநுக்கிரகத்தால் நற்கெதியை அடைந்தான்.

---

* வசுமதீ முன் ஒரு கல்பத்தில் ஸ்வர்ணபிம்பமாகயிருந்து சக்கிரவர்த்தி திருமகனுடைய யாகத்தை பூர்த்தி செய்தபடியால் கநகவல்லீ என்று திருநாமம் வந்தது.

17/626

* வசுமதீ தேவியை ஸ்ரீ வீரராகவன் திருமணம் செய்துக்கொண்டது முதல் சித்திரை மாஸத்தில் நடக்கும் பிரம்மோத்ஸவத்தைப்போல தைமாஸத்தில் அநுஷநக்ஷத்திரத்தில் த்வஜாரோஹணமாய் பிரதிதினமும் இரண்டு காலங்களிலும் ஸ்வர்ணமயமாயும் வெள்ளிமயமாயுமிருக்கிற வாஹநங்களேறி வஸுமதீதேவி அவதரித்த மக்ஷிகாவநமென்கிற ஈக்காட்டை ஸகலபரிஜனங்கள் சூழ, வலம்செய்து தர்மஸேன மஹாராஜனுடைய ஜந்மநக்ஷத்திரமான, பூரட்டாதியில் மங்கள ஸ்நானம் என்கிற தீர்த்தவாரியை கண்டருளுகிறார்.

## சாலிஹோத்திர முனிவருடைய சரித்திரம்.

கிருதயுகத்தில் பதரிகாசிரமத்தில் புருபுண்ணியரென்று ஒரு பிராம்மணர் தவம் செய்துக்கொண்டிருந்தார். அவருக்கு ஸதீ என்னும் பாரியாள் இருந்தாள். இவர்களுக்கு வெகுகாலம் பிள்ளையில்லை. காம்யசாஸ்த்திர விதிப்படி சாலியக்ஞம் செய்தால் பிள்ளையுண்டாவானென்று இருவத்தி எட்டு நெர்க்களாலொரு ஆகுதியாக ஆயிரம் ஆஹுதிகளை ஒரு வருஷகாலம் செய்தார். அந்த அக்னியில் லக்ஷ்மீசன்ஸர்வாபரண பூஷணனாய் சங்கசக்கிரகதாதி ஆயுதங்களுடன் அவதரித்து இந்தப்பிராம்மணனைப் பார்த்து ஓய் பிராம்மணனே உம்மிட யாகத்தால் நான் பரிபூர்ணனானேன். உமக்கு வேண்டிய வரங்களைக்கேளும் என்றார். பிராம்மணர் அவரைப் பார்த்து ஆநந்தத்துடன் தண்டம் ஸமர்ப்பித்து நல்ல புத்திரனைத் தரவேணுமென்று பிரார்த்தித்தார். ஓய் பிராம்மணனே உமக்கு நன்

Q22:33.2112 R
M14

மகன் ஜனிப்பான். அவர் சாலிஹோமத்தால் உண்டாகிற படியால் சாலிஹோத்திரர் என்றும் பெயரால் விளங்கு வார் என்று அனுக்கிரகித்து அந்தர்தானமானார். அக்கியி லிருந்து எழும்பி வெளியில் விழுந்த நெற்பொரிகளைப் பொருக்கி தன் பத்திநிக்குக் கொடுத்தார். அதை ஸதீ தேவி புஜித்து கர்ப்பமாகி பத்தாவது மாஸத்தில் ஜடா மண்டலத்துடனும் ஊர்த்வ புண்டரரேகைகளுடனும் கூடின பிள்ளையை பெற்றாள். பிதா புத்திரனைப் பார்த்து மகிழ்ந்து ஜாதகர்மாதிகளை செய்து யுக்தகாலத்தில் கலி யாணமும் செய்து வைத்தார். தாய் தகப்பனுக்கு சிசுரு ஷை செய்தகாலம் தவிர மிகுதி காலங்களில் தவம் செய் தார். இதை விட்டு வீக்ஷாரண்ணியம் வந்து சேர்ந்தார். தைஅமாவாஸ்யை புண்ணிய காலத்தில் ஸ்நானம் செய்ய பிரம்மாதி தேவர்களும் பிறகு முதலிய முனிவர்களும் காயத்திரீ அருந்ததீ முதலிய தேவிகளும் அப்ஸரஸ்த்ரீக ளும் மனிதர்களும், ஆகாயத்திலும் பூமியிலும் நாலுபக்க ங்களிலும் வந்து நிறைந்திருந்தார்கள். தானும் அதில் நீராட இடமகப்படாததால் ஸாயங்காலம் வரையில் காத் திருந்து கொஞ்சம் நெருக்க மற்ற பிறகு வடகரையில் ஸ்நானம்செய்து விதிப்படி தர்ப்பணாதிகளைப்பண்ணினார். ஆஹாரமில்லாமல் ஒரு வருஷகாலம் தவம் செய்தார். மறு தை அமாவாஸ்யையில் ஒரு வருஷ விருதம் பூர்த்தி யானதாக எண்ணி அன்று காலைமுதல் பொருக்கின உஞ்சமென்கிற தான்னியத்தை அமுது பொடியாக்கி ஸாயங்காலம் பாகம் செய்து பகவானுக்கு பாஞ்சராத் திரவிதிப்படி திருவாராதநம் செய்து அந்நத்தை நிவே தநம் பண்ணி வைச்வ தேவாதிகளை பண்ணி மிகுதியை

நாலுபாகமாக்கி அதிதிக்காக ஒரு பாகத்தை வைத்துக் கொண்டு அதிதியை எதிர்பார்த்திருந்தார். லக்ஷ்மீநாதன் ஒரு கிழ பிராம்மண ரூபியாக தடியை ஊன்றிக்கொண்டு கமண்டலம், குடை பாதரக்ஷை இதுகளுடன் வெகு தூரம் நடந்து வந்தவர் போல் சிரமப்பட்டுக்கொண்டு பசிதாகத்தால் வருந்தினவராக வந்தார். சாலிஹோத்திரர் அவருக்கு சிரமம் நீங்கும்படி உபசரித்து அதிதி பாகமான அந்நத்தை ஸமர்ப்பித்தார். கிழ பிராம்மணர் அதைப் புஜித்து விட்டு அஞ்சாரு நாளாக ஸாப்பிடாததால் பசி அடங்கவில்லை என்றார். சாலிஹோத்திரர் மற்ற பாகங்களில் இரண்டு பாகங்களை ஒவ்வொன்றாகப் பரிமாறினார். அதுகளையும் அந்த பிராம்மணர் அமுதுசெய்து அதிருப்தியாகயிருக்கக்கண்டு மிகுந்த நாலாவது பாகத்தையும் ஸமர்ப்பித்தார். கிழவர் அதை புஜித்து திருப்தி யடைந்ததாகச் சொல்லிமறைந்தார்.

சாலிஹோத்திரர் அன்று உபவாஸமாக இருந்து மறுநாள் உதயம் ஸ்நாநாதி நித்தியகர்மங்களை முடித்துக் கொண்டு முன்போல ஆஹார மில்லாமல் ஒரு வருஷம் தவம் செய்தார். மறு தை அமாவாஸ்யையில் பிரம்மாதி தேவர்களும் மற்றுமுள்ளவர்களும் முன்போல் வந்து ஸ்நானம் செய்வதைப் பார்த்து ஸந்துஷ்டனாய் தானும் பசிதாகத்தால் கிருசமான சரீரத்துடன் எழுந்து விழுந்துக் கொண்டு நீராடி தர்ப்பணாதிகளை செய்து விட்டு பாரணை பண்ணலாமென்று வொவ்வொரு தான்னியமாகப் பொருக்கின உயில் நெல்லை குத்தி பாகம் செய்து பகவானுக்கு நிவேதநம் செய்து வைச்வதேவாதிகளை செய்து

விட்டு அந்நத்தை நாலுபாகமாக்கி அதிதிக்காக ஒரு பாகத்தை வைத்துக்கொண்டு காத்திருந்தார். எம்பெருமான் முன்போல ஒரு கிழப் பிராமணர் போல வந்து அந்நம், ஜலம், படுக்க இடமும் கொடுமென்று கேட்டார். சாலிஹோத்திரர் அந்த கிழவரை ஸந்தோஷமாக உபசரித்து அதிதிபாகத்தை ஸமர்ப்பித்தார். அதை புஜித்து விட்டு கிழவர் அதிருப்தியாக இருப்பதைக் கண்டு சாலிஹோத்திரர் பிரீதியாக மற்ற பாகங்களையும் முன்போல் ஆதரவுடன் ஸமர்பித்தார். கிழப்பிராமணர் அதுகளை எல்லாம் புஜித்துவிட்டுத் திருப்தியானேன். சிரமம் தீரப் படுக்க எவ்வுள் என்றுகேட்டார். சாலிஹோத்திரர் இந்த கிரகம் தேவரீர்களுடையது தான் இதில் சயநிக்கலாம் அடியேனும் ஸமீபத்திலிருந்து சிச்ரூஷை பண்ணுகிறேன் என்று சொல்லிக்கொண்டு பக்கத்திலிருந்தார். அந்தக் கிழரூபியானவர் தென்திசையில் திருமுடியை வைத்து சாய்ந்தருள துந்துபி வாத்தியகோஷ முண்டாச்சுது. கந்தர்வர்கள் கானம் செய்தார்கள். அப்ஸர ஸ்திரீகள் நர்த்தனம் செய்தார்கள். தேவதைகள் புஷ்பவர்ஷம் வர்ஷித்தார்கள். பிரம்மாதி தேவர்களும் ஸநகாதியோகிகளும் நாரதாதி முனிவர்களும் ஸ்துதி செய்தார்கள். அச்சமயத்தில் பகவான் பிரஸன்னராய் சாலிஹோத்திர முனிக்கு விச்வரூபஸேவை ஸாதித்து ஓய் சாலிஹோத்திரரே உமக்குவேண்டிய வரனைக்கேளும் கொடுக்கிறேன் என்று அருளிச்செய்தார். அந்த லக்ஷ்மீநாதனை சாலிஹோத்திரர் பார்த்து பேரானந்தமடைந்து பலமுறை விழுந்து விழுந்து ஸேவித்து பரவசமாய் குதித்துக் கூத்தாடி ஸ்தோத்திரம் பண்ணி தேவரீர்களுடைய ஸாயுஜ்ஜியத்தைக் காட்டிலும்

கேழ்க்கும்படியான வரம் என்ன யிருக்கிறது என்று சொல்லி எப்பொழும் தேவரீர்களுடைய ஸாயுஜ்ஜியத்தையே தரவேணுமென்று பிரார்த்தித்தார். பகவான் அப்படியே அநுக்கிரகித்து தம் வலதுகையை சாலிஹோத்திரர் சிரஸில் வைத்துக் கொண்டு நாபீகமலத்தில் உண்டான சதுர்முகனுக்கு இடதுகையால் பிரணவத்தின் பொருளை உபதேசித்துக் கொண்டு தெர்க்கே சிரஸாக சேஷசயனத்தில் சயனித்தருளினர். பக்தபராதீனனான எம்பெருமான் பிரம்மாதி தேவர்களையும் நாரதாதி முனிவர்களையும் பார்த்து நாம் சாலிஹோத்திர முனிவரை படுக்க எவ்வுள் என்றும் கிம்கிரகமென்றும் கேட்டமையால் இக் க்ஷேத்திரத்துக்கு இது முதல் திருவெவ்வுளூர் என்றும் கிங்கிரகபுரம் என்றும் நமக்கு கிங்கிரகபதி என்றும் எவ்வுள் கிடந்தான் என்றும் திருநாமம் உண்டாகக்கடவது நானும் இந்த க்ஷேத்திரத்திலேயே வஸிக்கிறேன் என்றும் அருளிச்செய்தார். ஸ்ரீதேவி பூதேவிகள் பகவத் பாதார விந்தங்களை பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஸநக ஸநந்தநாதி நித்திய சூரிகளும், சேனை முதலியாரும் மற்ற பரிஜனங்களும், சங்கம், சக்கிரம், கதை, சார்ங்கம், கட்கம் ஆகிய இந்த திவ்யாயுதங்கள் சரீரதாரிகளாயும் சுத்திச் சூழ்ந்துக் கொண்டு உபாஸித்தார்கள் யென்று, தேவபாகருக்கு சாலிஹோத்திர முனிவர் சொன்ன இந்த விருத்தாந்தங்களை எல்லாம் மார்கண்டேயர் தெரிந்துக் கொண்டு கிருபையால் தன்னை வணங்கி பிரார்த்தித்த ஸஹஸ்ரானீக மஹா ராஜனுக்கு உபதேசித்தார். ஸஹஸ்ரா னீகமஹாராஜன் இதைக் கேட்டு மிகவும் திருப்தியடைந்து தானும் அந்த புண்

ணியாவர்த்த க்ஷேத்திரம் சென்று வீக்ஷாரண்ணியத்தில் ஹிருத்தாபநாசந தீர்த்தத்தில் நீராடி ஸ்ரீவீரராகவனை கண்ணாரக்கண்டு சேவித்து அருந்தவம் செய்து இஹத்தில் இஷ்டமான போகங்களை அனுபவித்து பறத்தில் மோக்ஷத்தையும் அடைந்தான்.

பக்தியுடன் இந்த மாஹாத்மியத்தை வாசித்தாலும் வாசிப்பித்தாலும் கேட்டாலும் கேழ்ப்பித்தாலும் புஸ்தகத்தை வீட்டில் வைத்துக்கொண்டிருந்தாலும் மங்களகரமான இஷ்டஸித்திகள் உண்டாகும்.

திருவெவ்வுளூர் மாஹாத்மியம் முற்றிற்று.

ஸ்ரீகநகவல்லீ ஸமேத ஸ்ரீவீரராகவன்

திருவடிகளிலே சரணம்.